# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No. I, Mettur
## Case No :M.C.No.19/2022

Prosecution witness : **ம.சா. 1** **Date : 04.03.2023**

| | |
|---|---|
| **Name : செல்வலட்சுமி** | Caste : வன்னியர் |
| **Husband's Name : தேவராஜ்** | Calling : |
| Village : கருங்கல்லூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டுர் | Age : 40 |

(Complainant and Respondent present)

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி மனுவில் எதிர்மனுதாரர் தரப்பில் 1வது சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.</u>**

1) திருமணப் பத்திரிக்கை ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.1**

2) திருமண புகைப்படம் **ம.சா.ஆ.2**

3) மனுதாரரின் ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.3**

4) எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.4**

5) மனுதாரரின் குடும்ப அட்டை நகல் **ம.சா.ஆ.5**

6) குழந்தைகளின் ஆதார் அட்டை (2) நகல் **ம.சா.ஆ.6**

7) முதல் குழந்தையின் பிறப்பு சான்று நகல் **ம.சா.ஆ.7**

8) 2 வது குழந்தையின் பிறப்பு சான்று நகல் **ம.சா.ஆ.8**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்றால் 2002ம் ஆணடு திருமணம் ஆனது. நாங்கள் எத்தனை பேர் என்னுடன் பிறந்தவர்கள் என்றால் 5 பேர் சகோதரிகள். நான் தான் முதல் பெண். மற்றவர்கள் என் தங்கைகள். என்

அப்பா என்ன செய்கிறார் என்றால் ரொட்டி வியாபாரம் செய்து வந்தார். என் அப்பாவிற்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரிதான். என் தந்தை ரொட்டி தயாரிப்பதற்கு 10க்கு 10 என்ற அளவில் கடை இருந்தது. தற்போது என் அப்பா இறந்துவிட்டார். எனக்கு திருமணமான பின்னிட்டு தான் எனது மற்ற 4 சகோதரிகளுக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் அப்பா எப்போது இறந்துபோனார் என்றால் 2013ம் ஆண்டு இறந்துவிட்டார். என் அப்பா இறப்பதற்கு முன்பே எங்கள் அனைவருக்கும் திருமணம் ஆகீவிட்டது என்றால் சரிதான்.

2) நான் எதிர்மனுதாரரை திருமணம் செய்த சமயத்தில் என் கணவர் தினக்கூலி அடிப்படையில்தான் வேலை செய்தார் என்றால் யூனியன் ஆபிசில் தற்காலிக பணியாளராக இருந்தார். கட்டிட காண்ட்ராக்ட் வேலை செய்தார். திருமணத்தின்போதே என் கணவர் நல்ல வருமானத்தில்தான் இருந்தார் என்றும் அதைப் பார்த்துதான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். கொளத்தூரில் எத்தனை சகோதரிகள் திருமணம் செய்துள்ளார்கள் என்றால் என்னுடன் சேர்த்து மூன்றுபேர் கொளத்தூரில் திருமணம் செய்துள்ளோம். ஒருவர் விவசாயமும் மற்றொருவர் ஸ்டிக்கர் கடை வைத்துள்ளார். எனது கணவரின் தம்பிசசிக்குமாருக்கு என் தங்கை சண்முகவடிவை திருமணம் செய்துள்ளார். மேற்படி சசிகுமார் ஸ்டிக்கர் கடை மட்டும்தான் வைத்துள்ளார்.

3) சகோதரிகள் ஐந்து பேருக்கும் என் அப்பா எத்தனை பவுன் போட்டார் என்றால் தலா 10 பவுன் ஒவ்வொருவருக்கும் போட்டார். மூன்று சகோதரிகளும் சேர்ந்துகொண்டு ஒரு சின்ன பிரச்சினைக்கு கூட என் கணவரை பிடித்து அடித்துவிடுவோம் என்றால் சரியல்ல. என் கணவரை பிடித்து என் தங்கைகளும், அவரது கணவரும் சேர்ந்துகொண்டு அடித்தது தொடர்பாக என் கணவர் கொளத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவருக்கு சுமார் 3 வருடங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டு இரண்டு முறை அறுவை சிகிச்சை

செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த காயத்தின் தன்மை குறித்து கால்களின் ஊனத்தன்மை குறித்து எனக்கு தெரியுமா என்றால் நான்கு மாதத்தில் சரியாகிவிட்டது. நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அவரால் நன்றாக நடக்க முடியும்.

4) 2003ம் ஆண்டுக்கு பிறகு என் கணவர் என் தங்கைகளுடன் பேசமாட்டார். எனது கணவர் சதீஷ் என்பவரிடம் இருந்து 2019ம் ஆண்டு ரூ.13 லட்சத்திற்கு வீடு வாங்கினார். அதன்பிறகு 2020ம் ஆண்டு அந்த இடத்தை விற்றுவிட்டு கருங்கல்லூரில் 5 ஏக்கர் நிலம் அவர் பெயருக்கு வாங்கினார். கொளத்தூர் நால்ரோட்டில் ஒரு இடம் என்னுடைய பெயருக்கு வாங்கப்பட்டது என்றால் சரிதான். அது எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 2011ம் வருடம் பார்த்தீபன் என்பவரிடமிருநது என் பெயருக்கு கிரயம் பெற்றேன். பார்த்திபனிடம் எங்கு வைத்து பணம் கொடுத்து கிரயம பெற்றேன் என்றால் கருங்கல்லூர் சின்னப்பன் என்பவரிடம் ரூ. 5 லட்சம் 20 பேர் பங்குதாரர்களாக சேர்ந்து மேற்படி இடத்தை வாங்கினோம். அந்த இடத்தின் நீள, அகலம் தெரியுமா என்றால் 100 அடி நீளம், 35 அடி அகலம் கொண்டது. எத்தனை செண்ட் என்றால் 8 செண்ட் நிலம். தற்போது கொளத்தூர் நால்ரோட்டில் ஒரு செண்ட் நிலம் 40 லட்சத்திற்கு போகுமா என்றால் செண்ட் சுமார் 7, 8 லட்சத்திற்கு போகும். அந்த இடத்தில் கடை கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா, அம்மா, என் தங்கைகள் பணம் கொடுத்து என் கணவர் கட்டினார். அந்த கடையை யார் கட்டினார்கள் யார் மேஸ்திரி என்று எனக்கு தெரியுமா என்றால் பழனிசாமி மேசன்தான் கட்டினார்.

5) என் கணவர் என் பெயரில்தான் வீடு வாங்கினார் என்றும் நான் என் கணவருக்கு தெரியாமல் வீட்டை விற்று என் தங்கைகளும், என் அம்மாவும் அந்த பணத்தை பெற்றுக்கொண்டனர் என்றால் சரியல்ல. எத்தனை கடை வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்றால் மேற்படி நிலத்தில் உன்னி என்பவர் கடை வைத்து வாடகையாக ரூ.20,000/- வருகிறது என்றால் ரூ.10,000/-தான் உன்னி கொடுத்தார். அதையும் என் கணவரிடம் தான் கொடுத்தார். தற்போது

அந்த கடையில் தற்போது யார் நடத்தி வருகிறர்கள் என்றால் நான்தான் கிரைண்டர் holesale கடை வைத்து நடத்தி வருகிறேன். என் தங்கை தான் மேற்படி கடையை எனக்காக பார்த்து வருகிறார். அந்த கடை மூலம் மாதம் ரூ.3 லட்சம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. வருமானம் ஏதும் வரவில்லை. விற்பனை ஆவதில்லை. மேற்படி கடைக்கு வருமானவரி, ஜிஎஸ்டி தாக்கல செய்கிறேன் என்றால் சரிதான். தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மேற்படி கடையை வாடகைக்கு விட்டால் மாதம் ரூ.30,000/– வாங்கி தருவதாக சொல்கிறார் என்றால் குடும்பத்தை வைத்து எதிர்மனுதாரர் பராமரிக்கவில்லை அதனால் விடமாட்டேன். அதனால் நான் மாதம் ரூ.50,000/–த்திற்கு மேல் சம்பாதிப்பதால் தான் நான் கடையை வாடகைக்கு விடமாட்டேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**